# வருவாய்த் துறை

மானியக் கோரிக்கை எண்.41
மானியக் கோரிக்கை எண்.51

## அறிவிப்புகள்
## 2016 - 2017

**ஆர்.பி. உதயகுமார்**
வருவாய்த் துறை அமைச்சர்

## 1. முக்கிய பிரமுகர்கள் வரவேற்பு பணிக்காகவும் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு வாகனங்கள் வழங்குதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,**

நடப்பாண்டில் சிவகங்கை, மதுரை, வேலூார், அரியலுூர், தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 6 மாவட்டங்களில் முக்கிய பிரமுகர்கள் வரவேற்பு பணிக்காக புதிய சீருந்துகளும், திருவள்ளூர், புதுக்கோட்டை, பெரம்பலுார் மற்றும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர்களுக்கு 4 சீருந்துகளும், என 10 வாகனங்கள் ரூ.1.82 கோடி செலவில் வழங்கப்படும்.

## 2. கிராம நிர்வாக அலுவலர்களுக்கு இணைய வசதியுடன் கூடிய மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் கணினி பயிற்சி வழங்குதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,**

2011–ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவித்தபடி, அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களின் பணித்திறனை மேம்படுத்தவும், நலப்பணிகள் மக்களுக்கு எளிதில் சென்றடையவும், 8,751 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மடிக்கணினி மற்றும் அச்சுப்பொறி வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நடப்பாண்டில் மேலும், 1,000 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு இணைய வசதியுடன் கூடிய மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் கணினி பயிற்சி ரூ. 4.00 கோடி செலவில் வழங்கப்படும்.

## 3. துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்களுக்கு இணைய வசதியுடன் கூடிய டேப்லெட் கணினிகள் வழங்குதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** வருவாய்த்துறையில் நடைபெறும் பணிகள் தொடர்ந்து கணினிமயமாக்கப்பட்டு வருவதால், மாவட்டங்களில் நடைபெறும் பணிகளின் விவரத்தினை அரசுக்கு தெரிவிக்கும் வகையிலும் மற்றும் அரசின் திட்டங்களை உடனுக்குடன் மக்களை சென்றடையும் வகையில், நடப்பாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் பணிபுரியும் துணை ஆட்சியர் நிலையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கு இணைய வசதியுடன் கூடிய டேப்லெட் கணினிகள் ரூ.**2.63** கோடி செலவில் வழங்கப்படும்.

## 4. வருவாய் நிர்வாக ஆணையரகத்தில் இரண்டு மாவட்ட வருவாய் அலுவலர் நிலை பணியிடங்களை உருவாக்குதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,**

வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் வருவாய் நிர்வாக இணை ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் ஒரு துணை ஆணையர் (நிர்வாகம்) மற்றும் சமூக பாதுகாப்புத் திட்ட ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் ஒரு துணை ஆணையர் (திட்டங்கள்) என்று இரண்டு பணியிடங்கள் மறு ஈடுபடுத்தல் (Re-deployment) மூலம் உருவாக்கப்படும்.

## 5. போட்டோ சின்கோ அச்சகத்தினை நவீனமயமாக்குதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,**

நில அளவை வரைபடங்களை நவீன உத்தியுடன் அச்சிடும் பொருட்டு சென்னை, மத்திய நில அளவை அலுவலகத்தில் இயங்கி வரும் “போட்டோ சின்கோ” அச்சகம் ரூ.1.00 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும்.

## 6. நில ஆவண மேலாண்மை மையங்களை உருவாக்குதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,**

நில ஆவணங்களை பாதுகாக்கும் பொருட்டு சேமிப்பு அறை, அலுவலக செயல்பாட்டிற்கான அறை மற்றும் பொதுமக்களுக்கென காத்திருப்பு வசதியுடன் கூடிய வரவேற்பு அறை ஆகிய கட்டமைப்புகளை உள்ளடக்கிய நில ஆவண மேலாண்மை மையங்கள் வட்ட அலுவலகங்களில் பல்வேறு கட்டங்களாக உருவாக்கப்பட்டு வருகின்றன. முந்தைய ஆண்டுகளில் வெளியான அறிவிப்புகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட 64 எண்ணிக்கையிலான நிலஆவண மேலாண்மை மையங்கள் செயலாக்கத்திற்கு வந்துள்ளன மற்றும் 90 மையங்கள் விரைவில் செயலாக்கத்திற்கு கொண்டு வரப்படும். தற்போது, நடப்பு ஆண்டில் கூடுதலாக 100 நிலஆவண மேலாண்மை மையங்கள் ரூ.25 கோடி செலவில் உருவாக்கப்படும்.

## 7. நில அளவை அலுவலகங்களை கணினி மயமாக்குதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,**

இணையவழி பட்டா மாறுதல் திட்டம் மற்றும் தேசிய நில ஆவணங்கள் நவீனப்படுத்துதல் திட்டம் ஆகிய அனைத்து திட்டங்களும் மாவட்ட மற்றும் மண்டல நிலஅளவை அலுவலகங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், அலுவலர்களின் பணிப் பதிவேடுகளை இலக்கமுறையில் பராமரிப்பதற்கும் ஒளிபிம்ப நகல் எடுப்பதற்கு ஏதுவாகவும், நிர்வாகப் பிரிவுகளை வலுப்படுத்துதல் மற்றும் நவீனப்படுத்துதல் பொருட்டு ரூ.60.5 இலட்சம் செலவில் கணிப்பொறி மற்றும் இதர உபகரணங்கள் வழங்கப்படும்.

## 8. நில ஆவணங்களுடன் ஆதார் எண்ணை ஒருங்கிணைத்தல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,**

நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளை துல்லியமாக நடைமுறைப்படுத்தும் பொருட்டும் மற்றும் நிலம் தொடர்பான மக்கள் நலத்திட்டங்கள் பயனீட்டாளர்களை முறையாக சென்றடைவதை உறுதிசெய்யும் பொருட்டும் நில ஆவண தரவு தளத்துடன் நில உரிமைதாரர்களின் ஆதார் எண்ணை ஒருங்கிணைப்பது மிகவும் பயனுள்ளதாகும். எனவே, ஏற்கெனவே கணினிப்படுத்தப்பட்ட நில ஆவணங்களுடன் நில உரிமைதாரர்களின் ஆதார் எண்ணை ஒருங்கிணைக்கும் பொருட்டு, சிறப்பு செயலாக்க நடவடிக்கை சோதனை முறையில் ஒரு வட்டத்தில் செயல்படுத்தப்பட்டு இதர வட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுப்படுத்தப்படும்.

## 9. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 14 வட்டங்களில் வட்ட தரவு மையங்களை ஏற்படுத்துதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,**

நில ஆவணங்களை நிகழ் நிலைப்படுத்துதல் மற்றும் பராமரிக்கும் பொருட்டு ரூ.84.00 இலட்சம் செலவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 14 வட்ட அலுவலகங்களில் வட்ட தரவு மையங்கள் உருவாக்கப்படும்.

## 10. இணையவழி பட்டாவுடன் புலப்படம் வழங்கும் திட்டம்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,**

இணையவழி பட்டாவுடன் புலப்படத்தினை இணைத்து வழங்கும்பொருட்டு கணினிப்படுத்தப்பட்டு வரும் புலப்படங்கள் யாவும் நிலஆவண தரவுத் தளத்துடன் ஒருங்கிணைக்கப்படவுள்ளன. இதன் பொருட்டு அனைத்து மாவட்ட நிலஅளவை அலுவலகங்களிலும் புலப்படங்கள் கணினிப்படுத்தப்பட்டு வருகின்றன. முந்தைய ஆண்டுகளின் அறிவிப்பினை அடிப்படையாகக் கொண்டு பெரம்பலூர் வட்டத்தில் மேற்காணும் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை மொத்தமுள்ள 54 இலட்சம் புலப்படங்களில் 39 இலட்சம் புலப்படங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, கணினிப்படுத்தப்பட்டுள்ள புலப்படங்களை பட்டாவுடன் வழங்கும் பொருட்டு, அனைத்து வட்டங்களுக்கும் மேற்காணும் திட்டமானது படிப்படியாக விரிவுப் படுத்தப்படும்.

## 11. நில அளவை துணை ஆய்வாளர்கள் மற்றும் வட்ட ஆவண வரைவாளர்களுக்கு இணைய வசதியுடன் கூடிய மடிக்கணினி வழங்குதல்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,**

இணையவழி பட்டா மாறுதல் திட்டம் அனைத்து வட்ட அலுவலகங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. மையக் கணினியில் பராமரிக்கப்பட்டு வரும் நிலஆவண தரவுத் தளத்தினை எளிதாக இயக்குதல் மற்றும் இணையம் வழியே பராமரிக்கும் பொருட்டு, இத்திட்டத்தில் தொடர்புடைய வட்ட அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 1,140 குறுவட்ட அளவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 285 துணை ஆய்வாளர்களில் 124 துணை ஆய்வாளர்களுக்கு மடிக்கணினிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இணையவழி பட்டா மாறுதல் திட்டத்தினை திறம்பட நிறைவேற்றும் பொருட்டு எஞ்சியுள்ள 161 துணை ஆய்வாளர்கள் மற்றும் 285 வட்ட ஆவண வரைவாளர்களில் 126 வட்ட ஆவண வரைவாளர்களுக்கு இணைய வசதியுடன் கூடிய மடிக்கணினிகள் நடப்பு நிதியாண்டில் ரூ.1.12 கோடி செலவில் வழங்கப்படும்.

## 12. அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளிலும் இணையவழி பட்டா மாறுதல் திட்டம்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,**

அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 34 இலட்சம் எண்ணிக்கையிலான மொத்த நகர்ப்புற நிலஆவணங்கள் யாவும் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. நகர்ப்புற நில ஆவணங்களை கணினி வழியே பராமரிப்பதற்கான இணையம் சார்ந்த மென்பொருள் தயாரிக்கப்பட்டு இணையவழி பட்டா மாறுதல் திட்டம் சென்னை மாவட்டத்தில் முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து நகர்ப்புறங்களிலும் இணையம் வழி பட்டா மாறுதல் திட்டத்தினை நிறைவேற்றும் பொருட்டு மேற்காணும் திட்டம் இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கும் நீட்டிக்கப்படும்.

## 13. நத்தம் நிலங்களுக்கு இணைய வழி பட்டா

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,**

முந்தைய ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அறிவிப்பினை அடிப்படையாகக் கொண்டு, அனைத்து நத்தம் நிலஆவணங்களும் (1.37 கோடி) கணினிப்படுத்தப் பட்டுள்ளன. எனவே, நத்தம் நிலங்களுக்கான இணைய வழி பட்டா வழங்கும் பொருட்டு திட்ட நிரல் தயார் செய்யப்படும். நடப்பு ஆண்டில் நத்தம் நிலஆவணங்கள் யாவும் இணையம் சார்ந்த மென்பொருள் மூலம் பராமரிப்பிற்கு கொண்டுவரப்பட்டு இணைய வழி பட்டாக்கள் வழங்கப்படும்.

**ஆர்.பி. உதயகுமார்**
வருவாய்த் துறை அமைச்சர்